ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் புள்ளிவிபரத் திணைக்களம்
திகதி 2021.02.15

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2021 சனவரி

**தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2021 சனவரியில் விரிவடைந்தன**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 2021 சனவரியில் 60.2 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து விரிவடைந்து காணப்பட்டது.** இதற்கு புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியின் விரிவடைதல் காரணமாகும். கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண்களின் அதிகரிப்பு ஒட்டுமொத்த கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் விரிவடைதலுக்குப் பங்களித்தது.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தித் துணைச் சுட்டெண்கள் விசேடமாக பண்டிகைப் பருவகாலத்தினைத் தொடர்ந்து உணவு மற்றும் குடிபானத் துறை தயாரிப்பில் ஆரோக்கியமான மட்டங்களில் காணப்பட்டன. எவ்வாறாயினும், கொவிட்-19 நிலைமை காரணமாக எதிர்பார்க்கப்பட்டதைவிட குறைந்தளவான கேள்வி தொழில் நடவடிக்கைகளைப் பாதித்தன என இத்துறையிலுள்ள சில பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டினர்.

புதிய ஆட்சேர்ப்புக்கள் மூலம் தொழில்நிலை இக்காலப்பகுதியின் போது உயர்வான வீதத்தில் விரிவடைந்தது. பிரதானமாக, உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய சுகாதார கரிசனைகள் காரணமாக குறைந்தளவான ஊழியர்கள் கிடைக்கப்பெற்றமையினால் தமது உற்பத்திகளை உரிய நேரத்தில் நிறைவுசெய்வதற்கு தாம் போராடியதாக சில தயாரிப்பாளர்கள் சுட்டிக்காட்டினர்.

| மாறி | 2020 திசெ | 2021 சன | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **61.2** | **60.2** | **-** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| | | **கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 63.5 | 60.9 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 60.1 | 57.1 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 51.1 | 51.6 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 55.6 | 59.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 75.3 | 76.1 | + | நீட்சியடைகின்றது உயர்வான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

புதிய கட்டளைகளும் உற்பத்தியும் மெதுவான வேகத்தில் விரிவடைந்த போதிலும், முன்னர் வைத்திருந்த இருப்புகள் குறைவடைதல் அத்துடன் எதிர்வரவுள்ள சீனப் புத்தாண்டு விடுமுறைநாட்கள் காரணமாக வழங்கல் இடையூறுகளை எதிர்பார்த்து எதிர்காலத் தேவைப்பாடுகளுக்காக உத்தேசிக்கப்பட்ட கையிருப்புகளின் திரட்டல் காரணமாக கொள்வனவுகளின் இருப்பு உயர்வான வீதத்தில் விரிவடைந்தது. மேலும், நிரம்பலர் விநியோக நேர துணைச் சுட்டெண்ணானது மாதகாலப்பகுதியில் உயர்வான வேகத்தில் நீட்சியடைந்தது. துறைமுகம்/ கப்பலேற்றுதலுடன் தொடர்புடைய சிக்கல் காரணமாக தமது கப்பற்பொருட்கள் தாமதமடைந்தன என பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

நாட்டினுள் அதேபோன்று முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குத் திரும்புவதற்கான எதிர்பார்க்கையுடன் அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரித்தல் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் மேலும் மேம்பட்டன.

**தயாரிப்பு கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**60.2**

2020 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 1.0 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி




: இலங்கை மத்திய வங்கி

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2020 திசெம்பரிலிருந்து 0.3 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2021 சனவரியில் 53.5 இனைக் கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது.

ஐக்கிய அமெரிக்கா, இந்தியா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சு 2021 சனவரியில் உயர்வான வீதத்தில் தொடர்ந்தும் அதிகரித்த அதேவேளை ஐக்கிய இராச்சியம், சீனா மற்றும் ஐரோப்பிய வலய நாடுகளின் கொ.மு.சுட்டெண் மெதுவான வீதத்தில் அதிகரித்தது.

*மூலம்: மார்க்கிட்[1], 2021 பெப்புருவரி 15இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**சாதகமான எண்ணப்பாங்குடன் ஆண்டு தொடங்கி பணிகள் துறை கொ.மு.சுட்டெண் 2021 சனவரியில் 56.2 பெறுமதியினைப் பதிவுசெய்தது.** இது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாம் அலையினால் பாதிக்கப்பட்டிருந்த பணிகள் துறையில் மேலும் மீட்சியொன்றினை எடுத்துக்காட்டுகின்றது. இவ்வதிகரிப்பிற்கு புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகளில் அவதானிக்கப்பட்ட அவதானிக்கப்பட்ட விரிவடைதல்கள் துணையளித்திருந்தன.

2021 சனவரியில் புதிய வியாபாரங்கள், குறிப்பாக நிதியியல், போக்குவரத்து மற்றும் மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் அதிகரித்தன.

பணிகள் துறை வியாபார நடவடிக்கைகள், தொடர்ச்சியாக இரண்டாவது மாதத்திற்காகவும் 2021 சனவரியில் அதிகரித்தன. நெருக்கடியின் பின்னரான சூழலுக்கு மக்கள் இசைவுடன் மாதகாலப்பகுதியில் பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்துத் துணைத் துறை அதிகரிப்பொன்றினை அவதானித்தது. காலப்பகுதியில் வழங்கப்பட்ட ஊக்குவிப்பு விலைக்கழிவுகளின் காரணமாக உள்நாட்டு சுற்றுலாத் துறை படிப்படியாக மீட்சியடைந்ததுடன் இணைந்து தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம் துணைத் துறைகளின் வியாபார நடவடிக்கைகள் மேலும் மேம்பட்டன. மேலும், நிதிப் பணிகள், கல்வி மற்றும் வேறு தனிப்பட்ட பணிகள் துணைத் துறைகளும் 2021 சனவரியில் வியாபார நடவடிக்கைகளில் அதிகரிப்பொன்றினை அனுபவித்தன. எனினும், அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் பற்றி தமது கரிசனைகளை இறக்குமதி வர்த்தகத்திலுள்ள பதிலிறுப்பாளர்கள் தொடர்ந்தும் எடுத்துக்காட்டினர்.

புதிய ஆட்சேர்ப்புக்களின் தாமதங்களுக்கு மத்தியிலும் ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் ஓய்வுபெறுதல் தொடர்பான பணி உடன்படிக்கைகள் நீடிக்கப்படாமையின் காரணமாக 2021 சனவரியில் தொழில்நிலை வீழ்ச்சியடைந்தது.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய சுகாதாரக் கரிசனைகளினால் தோற்றுவிக்கப்பட்ட வியாபார நடவடிக்கைகளுக்கான இடையூறுகளின் காரணமாக நிலுவையாகவுள்ள பணிகள் 2021 சனவரியில் அதிகரித்தன.

| மாறி | 2020 திசெ | 2021 சன | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **55.6** | **56.2** | + | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 55.0 | 55.2 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கை | 64.5 | 60.9 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 44.4 | 43.8 | - | வீழ்ச்சியடைகின்றது , உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 51.6 | 53.3 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 62.5 | 67.7 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

நெருக்கடியின் பின்னரான சூழலுக்கு மக்கள் இசைவுடன் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாவது அலை மூலம் பாதிக்கப்பட்டிருந்த பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சி தொடர்பில் அதிகரித்த சாதகமான எண்ணப்பாங்குடன் 2021 சனவரியில் எதிர்கால வியாபார நடவடிக்கைகள் மீதான எதிர்பார்க்கைகள் குறிப்பிடத்தக்களவு மேலும் அதிகரித்தன.

**பணிகள் கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 56.2**

2020 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 0.6 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு 2020 திசெம்பரின் 51.8 இலிருந்து 2021 சனவரியில் 51.6 இற்கு வீழ்ச்சியடைந்து உலகளாவிய பணி நடவடிக்கைகளில் விரிவடைதலில் மெதுவடைதலை சமிக்ஞைப்படுத்துகின்றது.

ஐக்கிய அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 சனவரியில் அவற்றின் பணிகள் துறைகள் விரிவடைந்ததை எடுத்துக்காட்டிய அதேவேளை, யப்பான் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் கொ.மு.சுட்டெண் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.

*(மூலம்: மார்க்கிட்[1], பெப்புருவரி 15, 2021 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 — மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 — மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 — மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.